பக்கங்கள்: 8

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
26 APR 1997

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 30 சனிக்கிழமை (12-04 1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 136

# அப்பாவி தமிழருக்கு எதிராக பெரும் மனித உரிமை மீறல்!

## ஆட்சேபம் தெரிவித்து ஜனாதிபதிக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கடிதம்

லண்டன், ஏப்ரல் 12

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக பெரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்டு அவற்றுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருக்கின்றது.

1996 இல் அறுநூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் காணாமல் போய்விட்டார்கள்.

இப்படி ஆள்கள் காணாமல் போயிருப்பது சீற்றம் தருவதாக உள்ளது. மனித உரிமை மீறல் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுத்து வருவதாக அரசு கூறினாலும் அது செயலில் இடம்பெறுவதாக இல்லை — என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். குடாநாடு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்த நாள் தொடக்கம் காணாமல் போன தமிழ் மக்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்திருக்கிறது.

1990 முதல் கடந்த 7 ஆண்டுகளில் காணாமல் போனவர்களில் மிகவும் கூடுதலான எண்ணிக்கையே இதுதான்.

மனித உரிமைகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் கோரிக்கை

## தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்

### 53 அரச சார்பற்ற அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள்

லண்டன், ஏப். 12

''இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவம் உடனே வெளியேற வேண்டும்''

ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவில் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் 53 அரச சார்பற்ற அமைப்புகள் இணைந்து கூட்டாக இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

சர்வதேசக் கல்வி மேம்பாட்டு நிறுவனம் கடந்த வியாழனன்று மேற்படி கூட்டத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் சிறிலங்கா இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் நிகழ்த்தி வரும் மனித உரிமை மீறல்கள், இராணுவ ஆக்கிரமிப்பினால் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து படுகின்ற அவலங்கள் ஆகியன சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் நிரந்தரத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்கத் தரப்பிலும் கவலை!

லண்டன், ஏப். 12

இலங்கை இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் நிகழ்த்தி வரும் மனித உரிமை மீறல்களை அமெரிக்காவின் மனித உரிமைகள் தூதுக் குழுவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கூட்டத்தில் சுட்டிக்காட்டி தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருக்கின்றது.

யாழ். குடாநாட்டில் காணாமற் போயுள்ள 700 தமிழ் மக்களின் நிலைபற்றி சுட்டிக்காட்டிக் கவலைதெரிவித்த அமெரிக்க மனித உரிமைத்தூதுக்குழு, மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு தயக்கம் காட்டி வருவதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளது.

தற்போது இலங்கையில் நடக்கும்யுத்தத்தில் இலங்கை அரசும் புலிகளும் நடக்கும் யுத்தத்தின் அளவுக்கு போர்க் கைதிகளைப் பிடிக்கவில்லை. இது உயிருடன் போர்க் கைதிகளைப் பிடிப்பதில்லை என்ற கொள்கையை இருதரப்பும் கடைப்பிடிக்கின்றார்களோஎன்னும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா-கிளிநொச்சி

## தரைவழிப் பாதையை திறக்க அரசு முயற்சி!

வவுனியா—கிளிநொச்சி தரைவழிப் பாதையைத்திறப்பதற்காக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு இலங்கை அரசு ஆயத்தமாகி வருவதாக தகவல்கள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

சமாதான முயற்சிகள் குறித்த பிரசாரங்களை சர்வதேச அளவில் ஒருபுறம் முடுக்கிவிட்டுக் கொண்டு, மறுபுறத்தில் தமிழர் பிரதேசத்தை இராணுவமயப்படுத்தும் ஜனாதிபதி சந்திரிகாவின் அணுகுமுறை உள்ளார்ந்த நேர்மையின்மையினையே காட்டுகிறது எனத் தமிழ் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த வானொலி மேலும் அறிவித்தது. (உ-10)

## நான்கு நாள்கள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 12

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று முதல் 16 ஆம் திகதி வரை நான்கு நாள்கள் பயணிகள் கப்பல் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இன்றும் 14 ஆம், 15 ஆம், 16 ஆம் திகதிகளிலும் இச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேவகௌடா அரசு கவிழ்ந்தது

### நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி

புதுடில்லி, ஏப். 12

இந்தியாவில் மத்தியில் ஆட்சியிலிருக்கும் பிரதமர் தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு நேற்று கவிழ்ந்தது.

நேற்று நள்ளிரவு நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தேவகௌடாவின் அரசு தோற்றுப் போனது.

தமது அரசின் மீது நம்பிக்கை தெரிவிக்குமாறு கோரி தேவகௌடா அரசு சமர்ப்பித்த பிரேரணை மீது நேற்றுக் காலை 11 மணி முதல் இரவு 11.30 மணி வரை சுமார் 12 மணிநேரம் விவாதம் நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில்விரைவில் பொதுத் தேர்தல்?

புதுடில்லி, ஏப். 12

இந்தியாவில் பிரதமர் தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்ததை அடுத்து, அங்கு மீண்டும் பொதுத்தேர்தல் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று நள்ளிரவில் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியுற்ற பிரதமர் தேவகௌடா உடனடியாக தமது அரசின் இராஜினாமாக் கடிதத்தை இந்திய ஜனாதிபதியிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

அதேசமயம் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பிந்திய செய்தி

## பிரதமர் தேவகௌடா உடனே ராஜினாமா!

புதுடில்லி, ஏப் 12

நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றதை அடுத்து பிரதமர் தேவகௌடா இன்று அதிகாலை 12-50 மணிக்கு தமது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி சங்கர் தயாள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கலாநிதி விக்கிரமபாகு கைதாகி பிணையில்!

கொழும்பு, ஏப். 12

கொழும்பிலுள்ள தொழிற்சங்க கட்டிடம் ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் பேலியகொட பொலீசாரால் கைதுசெய்யப்பட்ட நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நவசமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிற்சங்கம் ஒன்றின் கட்டடத்திலிருந்தே ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்பது தெரிந்ததே. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்பு விழா

எமது மருந்தகத்தின் கிளை நிறுவனம் ஒன்றை கல்வியங்காட்டில் இன்றுகாலை 10.48 மணியளவில் இறைவன் கிருபையால் திறக்கவுள்ளோம் என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**யாழ். மருந்தகம்**
**"WESCO"**
**கல்வியங்காடு.**

(சி/488)

# அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் கல்வி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் 1997- 04- 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும். சகல கூட்டுறவுச் சங்க கல்வி உத்தியோகத்தர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

**மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.**

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
1997- 04- 11

(சி/490)

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன இயக்குநர், ஆசிரியர்
**அ. லோகநாதன்**
**அவர்களின் அன்பு மாமியார்**
**திருமதி**
**செல்லம்மா கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்.**

கல்விக்கழகம்,
கைதடி.

(46332)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி தெய்வேந்திரம் கனகபூர்ணம்

தோற்றம்: **05-11-1950** மறைவு: **13-03-1997**

எங்கள் குடும்பத்தின் பூரணமாய், பண்பும் இன்சொல்லும் மிக்க மனைவியாய், பாசமிகு அன்னையாய், எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் நல்வழி நடத்திய அன்புத் தெய்வமே! அம்மா! உங்கள் நினைவு எம் உயிர் உள்ளவரை நெஞ்சைவிட்டு அகலாது அம்மா! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீள இறைவன் திருவடி சென்ற போது எமது துயரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தோருக்கும், துயரில் பங்கு கொண்ட யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவிகளுக்கும், யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர், மாணவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் (12-04-1997) இன்று சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கணவர், பிள்ளைகள்,**
**மைத்துனர், மைத்துனி,**
**மருமகள், பேரமக்கள்.**

'தர்சினி ஸ்ரோர்ஸ்',
60, ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/489)

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஏப். 12

தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா 95 ஆம் ஆண்டு மாணவர்களின் இறுதி வருட பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி பிராந்திய நிலையங்களில் இன்று முதல் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் எனப் பட்டதாரிப் பயிற்சி ஆசிரியர் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

## சிக்கனமாக மின்சாரத்தை பயன்படுத்துக!

யாழ்ப்பாணம், ஏப். 12

குடாநாட்டில் கூடுதல் மக்களுக்கு மின்வி நியோகம் வழங்க வசதியாக விநியோகிக்கப்படும் மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்கும்படி மின்சாரசபையின் யாழ். அலுவலகம் மக்களைக் கோரியுள்ளது.

ஜெனரேட்டர்கள் மூலம் வழங்கப்படும் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் வீடு ஒவ்வொன்றிலும் மூன்றுக்குக் குறைந்த மின்குமிழ் களைமட்டுமேஎரிக்கும்படியும்—

அதன் மூலம் மேலும் பலருக்கு மின்சாரம் வழங்கமுடியும் என்றும்—

மின்சாரசபை தெரிவித்துள்ளது. (உ-3)

## இரண்டாயிரம் ஆயுதங்கள் இதுவரை மீட்பு

கொழும்பு, ஏப். 12

தெற்கில் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரிடம் இருந்து இரண்டாயிரம் ஆயுதங்கள் இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் 423 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றில் 203 ரைபிள்கள், 65 ஷொட் கண்கள், 155 பிஸ்டல்கள் ஆகியன அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் 1868 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருந்தன.

(உ-3-150)

## அரியாலையில் சுதேசிய விழா

யாழ்ப்பாணம், ஏப். 12

அரியாலைப் பகுதியில் பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா இவ்வருடம் 78ஆவது ஆண்டு விழாவாக நாளையும், நாளை மறுதினமும் கொண்டாட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய ''அமரர்விஸ்வநாதன்'' அரங்கில் நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகளில் பார்வதி வித்தியாலய அதிபர் பொ. நடராசா பிரதம விருந்தினராகவும், பழம் பெரும்நடிகர் ''சோகசோபித சொர்ணக்கவிக்குயில்'' வி. கே. இரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கலைப்போட்டிகளில்வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கலும், நாடகமும் அங்கு இடம்பெறும்.

நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு அரியாலைமத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும் விளையாட்டுப் போட்டிகளில் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சகலதுறை விளையாட்டு வீரர் செ. க. மகாலிங்கம் [illegible] முன்னாள் விளையாட்டுவீரர் செ. தியாகராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் சுந்தரலிங்கம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் சுந்தரலிங்கம் (உரிமையாளர், சுந்தரலிங்கம் கராஜ், டச்சு றோட்) நேற்று 11- 04- 97இல் காலமானார்.

அன்னார் இந்திராதேவியின் அன்புக் கணவரும், வினோதன், சுமன், சதீஸ், (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12- 4- 97) சரசாலையில் அவர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 3. 00 மணியளவில் கொம்பிகுளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
**இ, இராசலிங்கம்**
(குஞ்சுராசா)

(9513)

## தம்பையா செகராஜசிங்கம் (ஜெயம்)

(இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தர்)

தம்பையா செகராஜசிங்கம் (ஜெயம் - இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தர்) காலமானார்.

அன்னார் ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திரு. திருமதி தம்பையா (புகையிரத நிலைய அதிபர்) ஆகியோரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி சின்னத்துரை (பூபதி), சற்குணசிங்கம் (கனடா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (தனம்), திருமதி ரங்கநாதன் (U.K.), திருமதி மாணிக்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரங்கநாதன் (U.K.) அவர்களின் மைத்துனரும், ஆனந்தச்செல்வம் (பொறியியலாளர்), செல்வானந்தேஸ்வரி (கண்டி), சர்வானந்தேஸ்வரி (U.K.), றஞ்சினி (U.K.), ரஜனி (U.K.), ரவீந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், நிதி (கனடா), சிவா (கனடா), ராஜன் (கனடா), ராஜி (கனடா), குமரன் (கனடா), ரோகினி (கனடா), தேவகி (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும், சுப்பிரமணியம் (துரை ஐயா), கனகசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (12-04-97) சனி காலை 10-00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**சரஸ்வதி** (மனைவி)
**கனகசுந்தரம்** (மைத்துனர்)

640, மானிப்பாய் றோட்,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(9512)

## திருமதி K.S கணபதிப்பிள்ளை செல்லம்மா

கைதடி கிழக்கைச் சேர்ந்த திருமதி K S கணபதிப்பிள்ளை செல்லம்மா வெள்ளிக்கிழமை (11 - 4 - 97) அன்று காலமாகிவிட்டார்.

இவர் K.S கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர், நிர்வாகி - சுகந்தன் அரிசி ஆலை, பரந்தன், வசந்தாஸ், - கைதடி, தனியார் எரிபொருள் விற்பனை நிலையம், கைதடி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி உமாதேவி லோகநாதன் (செல்வமதி) அவர்களின் பாசமிகு தாயாரும், அ. லோகநாதன் (ஆசிரியர், யூனியன் கல்லூரி - தெல்லிப்பளை) அவர்களின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**K.S கணபதிப்பிள்ளை**

''செல்வபதி''
கைதடி கிழக்கு,
கைதடி.

(46322)

## செல்வி வல்லிபுரம் செல்லம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான செல்வி வல்லிபுரம் செல்லம்மா 11-04-1997 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பருவதம் தம்பதிகளின் அருமை மகளும், செல்லத்துரை (Retd. Police Sgt.) இராசையா (Retd. Foreman, Jaffna Co-Operative), இராமலிங்கம் (Retd. Manager, M. P. C S., Chavakachcheri), தருமலிங்கம் (Retd. Police Sgt.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12-04-97 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல், தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**வ. இராசையா**
(சகோதரன்)

நுணாற்கந்தோர் ஒழுங்கை,
கற்குளி,
சாவகச்சேரி,

(46327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 வருட கால சிவில் யுத்தத்தின் பின் அங்கோலா நாட்டில் கூட்டரசு பதவியேற்பு!

லுவான்டா, ஏப். 12

1994 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இறுதி அமைதி உடன்பாட்டிற்கு — இணங்க — 20 ஆண்டு கால உள்நாட்டுப் போரின் பின்னர் — அங்கோலாவில் புதிய அரசு ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைக்கப்படவுள்ள அரசின் ஆளுங் கட்சிப் பிரதிநிதிகளும் முன்னாள் கிளர்ச்சியாளர்களான யுனிட்டா அமைப்பைச் சேர்ந்த 70 உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர்.

எனினும் யுனிட்டா அமைப்பின் தலைவர் ஜோனஸ் செவின்டி பாதுகாப்பு நிலைமைகள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அரசு அமைக்கும் வைபவத்தில் கலந்துகொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வுக்கு எல்லா ஏற்பாடுகளும்நடைபெற்று வருவதாகவும், கலகமடக்கும் படையினர் வீதிகள் எங்கும் காணப்படுவதாகவும் பி.பி.சி. செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரசு அமைக்கும் உத்தியோக பூர்வ நிகழ்ச்சிகளில் தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா உட்பட பல உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

எண்ணெய்வளமும், வைரச் சுரங்கங்களும் அங்கோலாவில் இருந்த போதிலும் போட்டி வல்லரசுகள் வழங்கிய ஆயுதங்கள் காரணமாக 20 ஆண்டுகளாக அங்கு உள்நாட்டுச் சண்டைகள் இடம் பெற்று வந்தன.

அமையவிருக்கும் புதிய அரசு அங்கோலாவை மீண்டும் கட்டியெழுப்பும் என நம்பப்பட்டாலும் — புதிய அரசு ஒன்று அமைக்கும் முயற்சிகள் வெற்றியடைந்துள்ள போதிலும் — போட்டிக் குழுக்களிடையே இன்றும் உடன்பாடு காணப்படாத விடயங்கள் பல உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் யுனிட்டா கிளர்ச்சியாளர்களுக்கு இதுவரை ஆதரவு வழங்கிவந்த ஸயர் அதிபர் முபுட்டுவின் வீழ்ச்சியை அடுத்து யுனிட்டா கிளர்ச்சியாளர்களின் பிடி தளரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1975 ஆம் ஆண்டு போர்த்துக்கீஸரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் அங்கோலாவில் போராளிகளுக்கும் போட்டிக் குழுக்களுக்கும் இடையேயான மோதல்கள் பெரும் சிவில் யுத்தமாக நீடித்து வந்தது.

(ஐ-10)

## ஈரான் - ஜேர்மனி உறவில் பெரும் நெருக்கடி நிலை

பொன். ஏப். 12

ஈரானுக்கும் ஜேர்மனிக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் தகராற்றில் ஐரோப்பியச் சங்கம் ஜேர்மனிக்கு ஆதரவாக ஈரானுக்கான தங்களது தூதுவர்களை மீளப்பெறத் தீர்மானித்துள்ளது. ஈரானுடன் பேச்சுக்கள் நடத்துவதை நிறுத்துவது என அச் சங்கத்தைச் சேர்ந்த 15 நாடுகள் தீர்மானித்துள்ளன.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஈரான் எதிர்ப்பாளர்கள் இருவர் ஜேர்மனியில் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் ஈரானுக்குத் தொடர்பு உண்டு என ஜேர்மன் நீதிமன்றம் ஒன்று வழங்கிய தீர்ப்பே இந்த நெருக்கடிக்குக் காரணமாகும்.

இத் தீர்ப்பை அமெரிக்கா வரவேற்றுள்ளது. ஈரானின் நெடுங்கால பயங்கரவாதத்திற்கு இது ஒரு சான்று என அமெரிக்கா தெரிவித்துள்ளது

## லுபும்பாஸி விமானத் தளமும் கிளர்ச்சியாளர் வசமானது

### தப்பிஓட அரச படைகளுக்கு அனுமதி

லுபும்பாஸி, ஏப். 12

ஸயர் நாட்டு அதிபரின் பாதுகாப்புப் படையினருடனான கடுஞ் சமரின் பின்னர் லுபும்பாஸி விமானத் தளத்தையும் கிளர்ச்சிப் படைகள் கைப்பற்றிவிட்டன.

இப்போது அந்த நகரம் முழுவதுமாக அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

விமானத்தளத்தில் எஞ்சியிருந்த அரச துருப்புக்கள் விமானம் ஒன்றில் ஏறித் தப்பிச் செல்ல கிளர்ச்சியாளர்கள் அனுமதித்தனர். எஞ்சியிருந்த ஏனைய ஸயர் படைகளின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அநேகமாக அவர்கள் கிளர்ச்சியாளர்களிடம் சரணடைந்திருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## ஸயர் நாட்டு அதிபரின் கானக இல்லம் சூறை

லுபும்பாஸி, ஏப். 12

ஸயரின் லுபும்பாஸி நகரம் கலோரன் கபீலா தலைமையிலான கிளர்ச்சிப் படைகளிடம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அங்கு அமைந்திருந்த அதிபர் முபுட்டுவின் கானக இல்லத்தை மக்கள் சூறையாடினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதிபரின் இல்லத்தில் இருந்த பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டன. அலங்கார விளக்குகள் அடித்து நொறுக்கப்பட்டன.

தப்பியோடிய அதிபரின் பாதுகாப்புப் படையினர் கைவிட்டுச் சென்ற ஏராளமான துப்பாக்கி ரவைகள் இல்லம் எங்கும் சிதறிக் காணப்பட்டன என்று செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதே வேளை — லுபும்பாஸி நகரில் அமைந்திருந்த ஸயர் நாட்டு இராணுவ அதிகாரிகளின் இல்லங்களும், அலுவலகங்களும் கூட மக்களால் சேதமாக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளன.

கிளர்ச்சிப் படைகளுடன் ஏற்கனவே இணைந்து கொண்ட ஸயர் இராணுவப் பிரிவினர் கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்து தமது தலைமையகத்தை நிறுவியுள்ளனர். (ஐ)

### தென் கொரியாவுடன்

## சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து வடகொரியா விரைவில் அறிவிக்கும்

சியோல், ஏப். 12

தென் கொரியாவுடன் விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதா இல்லையா என்ற முடிவை வடகொரியா அடுத்தவாரம் எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடகொரியாவின் முடிவு சாதகமாக இருக்கும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நான்கு முனைப் பேச்சுவார்த்தைகளை நடத்த வடகொரியா சாதகமான முறையில் முன்வரும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் தெரிவித்தது.

வடகொரிய, தென்கொரிய மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி நியூயோர்க்கில் கூடவுள்ளனர். இதில் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்புக்கு வடகொரியாவின் பதில் கிடைக்கும் என்றும் அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது. (ஐ)

## செய்திச் சாரம்

### சேமக்காலையில் மிதி வெடிகள்

கொழும்புத்துறை, ஏப். 12

ஊர்காவற்றுறை கத்தோலிக்க சேமக்காலையில் மிதி வெடிகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதால் மக்கள் அங்கு செல்ல அச்சம் தெரிவித்துள்ளனர். அண்மையில் இப்பகுதியில் மாடு ஒன்று மிதி வெடியில் சிக்கியுள்ளது.

(ஐ-30)

### இலைக்கஞ்சி வழங்கல்

கொழும்புத்துறை, ஏப். 12

யாழ். மாநகரசபை சித்த ஆயுர்வேதப் பகுதியினரால் போசாக்கு குறைந்தோருக்கான இலைக்கஞ்சி வழங்கும் பணி கடந்த வியாழனன்று அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தில் ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (ஐ-30)

### ஆலயத்தில் பூசை ஆரம்பம்

கொழும்புத்துறை, ஏப். 12

தெல்லிப்பழை கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நீண்ட நாள்களின் பின்னர் பூசைகள் ஆரம்பமாகி உள்ளன.

(ஐ-30)

### இல்லங்களில் வழிபாடு

கொழும்புத்துறை, ஏப். 12

யாழ். சுண்டுக்குளி மறைப் பங்கில் உள்ள இல்லங்களில் பிரதி வியாழக்கிழமை, பிரதி சனிக்கிழமைகளில் புனித - யுவானியார் பங்கு மரியாயின் சேனையினரால் நோயாளர் - மரித்தோருக்காகவும் சமாதானமும் அமைதியும் நாட்டில் நிலவ வேண்டியும் இறைவழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஐ-30)

### காய்ச்சலினால் மரணம்

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு கடந்த ஒரு வாரத்துக்கு முன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் கடந்த புதனன்று அங்கு மரணமானார்.

அரியாலை மேற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை குணரட்ணம் (வயது 55) என்பவரே மரணமானவராவார். (ஐ-15)

### நீர் இறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 6 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் வழங்கப்பட்ட இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஏற்கனவே விண்ணப் பித்தவர்களுக்கு வழங்கப்பட உள்ளன. (ஐ-15)

### விசேட பாட அலுவலர்கள்

அச்சுவேலி, ஏப். 12

யாழ். கல்வி வலயம் இரண்டில் விசேட பாட அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆரம்பக்கல்வி, தமிழ், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சமூகக்கல்வி, நடனம், சங்கீதம், மனையியல், விவசாயம், சமயம், உடற்கல்வி, வர்த்தகம் ஆகிய 13 பாடத்துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(ஐ 11)

### மாணவருக்கு அ. அட்டைகள் விநியோகம்

தென்மராட்சி, ஏப். 12

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி விசேட அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

இவ் விசேட அடையாள அட்டைகள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டது (ஐ-117)

### பாலர் பாடசாலை இடம்மாற்றம்

அச்சுவேலி தெற்கில் இயங்கிய கஜமுகன் பாலர் பாடசாலையின் வகுப்பறை சேதமடைந்துள்ளதால் அது தற்சமயம் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் செயற்படுகிறது. (ஐ-11)

## கிழக்கு மக்களின் அவலங்கள்: எம். எஸ். எவ். அதிகாரி கவலை

கொழும்பு, ஏப். 12

''கிழக்குப் பகுதியில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் இடம பெறுவதால் அங்குள்ள மக்கள் படும் துன்பங்கள் மறக்கப்பட்டவையாகி விட்டன.''

எம். எஸ். எவ். பிரெஞ்சு மருத்துவ குழுவின் இலங்கைப் பிரதிநிதி கிளைவோர் லட்டில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

மோசமான துன்ப அனுபவங்களை அந்தப்பகுதி மக்கள் தினமும் எதிர்நோக்குகிறார்கள். அவர்கள் யுத்தத்தினால் களைத்து விட்டார்கள்.

அங்குள்ள மக்கள் பல தடவைகள் இடம் பெயர்ந்து இன்னல்களைச் சுமந்து கொண்டு வாழ்கிறார்கள்.

அதேபோல வன்னி மக்களும் பெரும் இன்னல்களுடனேயே வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்- என்று தெரிவித்துள்ளார். (ஐ-3-150)

## புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 12

வன்னி மாவட்டத்துக்கான தபாற் சேவைகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

வன்னி மாவட்டத்துக்கான தபாற் சேவையை நிறுத்தியதன் மூலம் வெளி இடங்களுடன் அப்பகுதி மக்கள் தொடர்பு கொள்வதை அரசு தடுத்துள்ளது என்றும்-

மக்கள் படும் இன்னல்களை வெளியிடங்களுக்கு தெரியப் படுத்துவதை தடுக்கும் செயல் இது என்றும்- விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

உலகத் தொடர்புகளில் இருந்து அவர்களை தனிமைப் படுத்தும் அரசின் செயற்பாட்டை கண்டிப்பதாக விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ஐ-3-150)

## எழுத்தறிவூட்டல் பயிற்சிநெறி

வலிகாமம் தெற்கு, ஏப். 12

சுன்னாகம் கோட்டைக்காடு அ. த. க. பாடசாலையில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ்எழுத்தறிவூட்டல் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பமாக உள்ளது. பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள்,எழுத்தறிவு அற்றவர் பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக தமது விண்ணப்பங்களை மேற்படி பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கும் படி கேட்கப் பட்டுள்ளனர். (ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரியவேளை கப்பல் வராததால் மன்னார் சேவை இடம்பெறவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 11

திருகோணமலையில் இருந்து ''நியூ கோ எண்டு ரன்ஸ்'' கப்பல் வியாழனன்று காங்கேசன்துறைக்கு வந்து சேராததால் மன்னார்செல்ல விருந்த கப்பல் சேவை நடைபெறவில்லை.

கடந்தபுதனன்று இக்கப்கல் திருகோணமலையில் இருந்து 146 தனிப்பட்ட பயணிகளுடன் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட இருந்தது.

எனினும் இக் கப்பல் காங்கேசன்துறை நோக்கிச் செல்ல கடற்படையினர் அனுமதி வழங்க மறுத்ததாகவும் —

இதையடுத்து இக் கப்பல் சேவை ரத்துச் செய்யப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் நேற்றுமுன்தினம் காலை காங்கேசன்துறை வந்து மன்னாருக்குப் பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கப்பல் வராததால் காங்கேசன்துறைக்குச்சென்ற மன்னார்ப் பயணிகள் திருகோணமலைக்குச் சென்ற கப்பல்களில் சென்றனர்.

அதேவேளை — ''நியுகோ எண்டுரண்ஸ்'' கப்பல் தொடர்பாக கடற்படையினருக்கும் கப்பல் நிறுவனத்தினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து இன்று திருகோணமலை செல்லும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்டி சில்வாவும், வடக்கு மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் சோமபாலகுணதிரவும் ஆராய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு, போதிய அகதிகள் யாழ்ப்பாணம் செல்லாத நிலை ஏற்பட்டுள்ளதால், திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு அகதிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றியும் இவர்கள் ஆராய்வார்கள். (இ-3-150)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில்: | | விண்ணில்: |
|---|---|---|
| 04 — 02 — 1939 |  | 12 — 04 — 1991 |

### திருமதி துரைராஜா கோணேஸ்வரி

''அன்னையைப் போலொரு தெய்வமில்லை
அவள் அடி தொழ மறுப்பவர் மனிதரல்ல.''
மேலெல்லாம் வியர்த்திடப் பாடுபட்டே
மேன்மையாய் நாம் வாழச் செய்திட்டாள்
துன்பமும் தொல்லையும் ஏற்றுக் கொண்டே
நாமெல்லாம் சுகம் பெறச் செய்திட்டாள்
எம் கண்கண்ட தெய்வத்துக்கு காலமெல்லாம்
எம் கண்ணீர்ப் பூக்கள் காணிக்கை.

கணவன், பிள்ளைகள்.

93, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (46215)



## நினைவஞ்சலி

அன்னையின் அனைப்பில்:
25-03-1911



ஆண்டவன் அழைப்பில்:
11-03-1997

திருமதி
### சூசன் இரத்தினம் ஆறுமுகம்

பரலோகத்திலிருந்து ஒரு சத்தம்
உண்டாகக் கேட்டேன் அது: ''கர்த்
தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல்
பாக்கியவான்கள், என்றெழுது.
அவர்கள் தங்கள் பிரயாசங்களை
விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்''
(வெளி. 14: 13)

எமது அன்புத் தெய்வத்தின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேற அனைத்து உதவி புரிந்தவர்களுக்கும், எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

15 ஆம் மைல்கல்,
உடுப்பிட்டி. (46295)


## சமய நிகழ்வுகளில்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 10 ஆம் திருவிழாவான திருமஞ்சம் நாளை நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 4 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. பூரணைதினமான எதிர்வரும் 22 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் கோயில் தேர்த்திருவிழா புத்தாண்டு தினமான திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். மறுதினம்தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஐ-111)

★ ★ ★

நெடுந்தீவு மேற்கு நெழுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தின் நிறைவு உற்சவம் எதிர் வரும் திங்கட்கிழமை நடைபெறும். (ஐ-111)

★ ★ ★

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான ஸ்ரீ ராமநவமி யாகமும், விழாவும் எதிர் வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கின்றன. நாட்டு மக்களின் நலனை வேண்டி இந்த யாகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

## தொழிற்றிறன் பயிற்சிகள்

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் தொழிற்றிறன் அபிவிருத்திப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறியில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து என்பன பயிற்றுவிக்சப்படும். இதில் சேர விரும்புவோர் விண்ணப்பங்களைத் தாமே தயாரித்து இம் மாதம் 12ஆம் திகதிக்கு முன்பதாக அதிபருக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

## திறந்த பல்கலை. மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஏப். 12

இலங்கை திறந்த பல்கலைக்சழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான பகுதி I, பகுதி II பழைய, புதிய மாணவர்களை நாளைக்குள் யாழ். மத்திய கல்லூரியிலும், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் சமுகமளித்து விவரங்களைப் பதியுமாறு கோரப்பட்டிருக்கிறது.

இந்தக் சற்கை நெறிக்கான சகல ஆவணங்களும், புத்தகங்களும் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

உயர் தொழில் ஆங்கிலம், முகாமைத்துவ டிப்ளோமா கல்வி நெறியைப் பின்பற்ற விரும்புபவர்களும் பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


## நவீன மருத்துவமனை

மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

தீவிர நோயாளர்களுக்கு வாட்வசதி, ஆய்வுகூடவசதி நிபுணத்துவ வசதியுடன், மீண்டும் தன் சேவையினை ஆரம்பித்துள்ளது.

[illegible]
(46323)


## கட்டுடையில் பொதுக் கிணறு

வலிகாமம் தெற்கு, ஏப். 12

கட்டுடைக் கிராம மக்களின் குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க நாற்பதாயிரம் ரூபா செலவில் பொதுக்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கட்டுடை அரசடி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள அரசகாணியில் இக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-152)


## வாழ்த்துகின்றோம்

### ★ வண. J. T. வில்லியம் ★

**இறைபணியில் 25 ஆண்டுகள்**

''மேலும் ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.''

எபி. 5: 4

போதகர், உடன் ஊழியர், சபையார்
சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்.

24, இராமையார் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-473)



## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
## பயிலுநர் எழுதுநர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்குறிக்கப்படும் தகைமையுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை:** கூட்டுறவுப்பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) சித்தி.

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் வணிகவிடல் சித்தி பெற்றவர்களுக்கும், சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **24 - 04 - 1997.**

பொது முகாமையாளர்
நல்லூர் ப.நோ.கூ. சங்கம், திருநெல்வேலி.

(சி/484)



சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

## கூறுவிலை கோரல்

கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு அரக்கு முத்திரையிட்ட கூறுவிலைகள் எம்மால் 24-04-97 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொண்ட படிவத்திலேயே கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (வழங்குநர்களாக பதிவு செய்தவர்கள் கட்டணம் செலுத்தாது படிவம் பெற்றுக்கொள்ளலாம்) ஒவ்வொரு வேலைக்கு வெவ்வேறான படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.

1. பென்ஸ் (911) லொறி பொடி அடித்தல்.
2. பென்ஸ் லொறி ரிங்கர் வேலை செய்தல்.
3. பென்ஸ் லொறி வயறிங், லைற் வேலை செய்தல்.
4. சங்க காட்சி அறை கண்ணாடி சுருக்கு கேற் திருத்த வேலை (3 மீற்றர் தர 2 மீற்றர் கொண்ட 3 பகுதிகள்)
5. சங்க மின்தறி நெசவாலை 15 தறிகளையும் சேவிஸ் செய்தல்.

சங்க வேலை நேரங்களில் லொறியைப் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

7-4-97 (சி/483)



## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 23 — 07 — 1927 | 25 — 03 — 1996 |

### திருமதி கந்தையா நாகம்மா

திதி: **12 - 04 - 1997**

ஆண்டொன்று சென்றாலும் எங்கள் ஆறாத் துயர் நீங்கிடுமோ?

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தபாலகவீதி,
மகளிர் கல்லூரியடி, சாவகச்சேரி. (46328)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனோர் பற்றிய விசாரணைக்கு அழைக்கப்பட்ட 61 பேரின் பெயர் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 12

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 17 ஆம் திகதிமுதல் 19 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

காணாமற் போனோர் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 61 பேர் தொடர்பான விசாரணைகளுக்கு முறைப்பாட்டுக்காரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டுக்காரர்கள் தம்முடன் தமது அடையாள அட்டை, காணாமற்போன சம்பவத்தினை நிரூபிக்கக் கூடிய ஆவணங்கள் ஆகியவற்றையும் எடுத்துச் செல்ல வேண்டும். சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் எவராவது இருந்தால் அவர்களையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கும் 61 முறைப்பாட்டுக்காரர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

★ சின்னப்பு பூபதி (தகப்பன்)— 3 ஆம் கட்டை, சிங்கராயர் லேன், கட்டைப்பிராய்.

★ விஜயராஜ் (தகப்பன்)— இந்திரபுரம், பளை.

★ வல்லிபுரம் செல்வநாயகம் (தகப்பன்). — இணுவில் கிழக்கு.

★ திருமதி சூரியகுமாரி வைத்தியநாதன் (மனைவி)— இருபாலை கிழக்கு, கோப்பாய்.

★ எஸ். விஜயகோபால் (மனைவி) கீரிமலை வீதி, சித்தன்கேணி.

★ பி. செல்வராஜா (தகப்பன்) — கோயிலாக்கண்டி மத்தி, கைதடி.

★ திருமதி கறுப்பன் நாகம்மா (தாய்)—125 பீச் றோட், தம்பிராஜா வளவு.

★ திருமதி சிதம்பரப்பிள்ளை கமலாதேவி (தாய்) — மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

★ கே.செல்வரட்ணம் தேகப்பன்) — 56, அங்காடி லேன், அரியாலை.

★ திருமதி இன்பராணி செல்வராஜா (தாய்' — 57, ஆனந்தவடலி வீதி, கொழும்புத்துறை.

★ திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் (தாய்) — ஏ.ஜி. ஏ. லேன், சுன்னாகம்.

★ பொன்னையா நல்லசேகரம்பிள்ளை (தகப்பன்)— வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு,

★ சவரிமுத்து சேவியர் தாஸ் (தகப்பன்) — 310, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

★ எம். சுந்தரலிங்கம்(கணவன்) — வழக்கம்பரை அம்மன் கோயிலடி, தொல்புரம் கிழக்கு.

திருமதி இரத்தினம் கமலா (தாய்) —கலைமதி சனசமூக நிலையம், புத்தூர் மேற்கு.

★ குரூஸ் வில்விரட் (தகப்பன்) — பிள்ளையார் கோயிலடி, நெடுங்குளம் கொழும்புத்துறை.

★ திருமதி தவமணி யோகநாதன் (தாய்) — இணுவில் மேற்கு.

★ திருமதி வேலன் கணபதி (தாய்)— அல்லாரை வடக்கு, கொடிகாமம்.

★ திருமதி கே. சிவபாக்கியம் (தாய்) — மீசாலை வடக்கு.

★ திருமதி தேவதாஸன் மகேஸ்வரி (தாய்) — அம்மன் கோயில் அருகாமை, சாவகச்சேரி வடக்கு.

★ திருமதி ரமேஸ் மாலினி (மனைவி) — நாவற்குழி வடக்கு கைதடி.

★ திருமதி ஸ்ரீரஞ்சனி ரவீந்திரன் (மனைவி) — 54/9, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் மேற்கு.

★ திருமதி அருளப்பு மரியானந்தன் அல்லேலூயா (தாய்)—19, ஒடக்கரை வீதி, குருநகர்.

★ ஏ. சந்திரசேகரம் (தகப்பன்) — மீசாலை கிழக்கு.

★ திருமதி ஆர். சிவசக்தி (மனைவி) — பெரிய அரசடி சாவகச்சேரி.

★ சின்னக்குட்டி செல்லத்துரை (தகப்பன்) — குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு.

★ திருமதி எம். தெய்வேந்திரன் (மனைவி) — கோப்பாய் மத்தி, ஆசாரி லேன், கோப்பாய்.

★ ஆர். கந்தசாமி (தகப்பன்) — கதிர்காமம் கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

★ திருமதி கமலாதேவி யோகராஜா (மனைவி) — அச்சுவேலி வடக்கு, மத்திய சனசமூக நிலையத்திற்கு பின்பாக, அச்சுவேலி.

★ திருமதி மாலினி அன்ரன் ஜெயக்குமார் (மனைவி) — 136, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் மேற்த.

★ திருமதி லெட்சுமி நடராஜா (மனைவி) — கோப்பாய் மத்தி, சென். ஜோசப் தேவாலயத்திற்கு அருகாமை.

★ முருகன் கந்தையா (தகப்பன்) — சென். செபஸ்ரியன் லேன், கோண்டாவில் கிழக்கு.

★ திருமதி பொன்னம்பலம் தங்கமணி (தாய்) — தச்சன் தோப்பு. கைதடி.

★ பண்டாரம் ரத்தினம் (தகப்பன்)—தச்சன் தோப்பு கைதடி.

★ எஸ். நவரட்ணம் (தகப்பன்) — 50/18, செட்டியார் வீதி, நல்லூர்.

★ எம். சிவசிதம்பரம் (தலைவர், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி) — முள்ளையடி, பளை.

★ ஜே. பவா (தகப்பன்) — தெல்லிப்பழை, பன்னாலை.

★ திருமதி பூபாலசிங்கம் இராசம்மா (தாய்) — நீர்வேலி வடக்கு.

★ மரி அனித்தராணி செல்வராஜா (மனைவி) — பழைய பொலீஸ் நிலையம், கோப்பாய் தெற்கு.

★ திருமதி தங்கம் கந்தையா (தாய்) — ஆசாரி லேன். கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

★ திருமதி பி. விஜித்தா (மனைவி) — நாசர், பளை.

★ திருமதி சின்னத்தம்பி யோகாம்பி (தாய்) — மூத்தநாயனார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

★ திருமதி கமலானந்த யோகேஸ்வரி செல்வராசா (தாய்) — நகுலேஸ்வர வீதி, கீரிமலை மே/பா, எஸ். ஏ. ஆறுமுகம், எச். சி. ஆர். ரி. வைரவர் கோயிலடி லேன், சுதுமலை தெற்கு.

★ திருமதி பி. தெய்வேந்திரன் (மனைவி) — சாவற்கட்டு, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

★ திருமதி மேரி வெனிஸ்ரிகா நேசராஜா (மனைவி) — மல்லாகம்.

★ திருமதி இராசையா நடராசா (தாய்) — சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.

★ சின்னையா நல்லையா (தகப்பன்) — டச்சு வீதி கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

★ திருமதி சாவித்திரி பொன்னுகோன் (தாய்) — ''கௌரி பவனம்'', வீமன்காமம், தெல்லிப்பழை.

★ கந்தையா நாகரட்ணம் (தாய்) — நீர்வேலி வடக்கு.

★ திருமதி லெட்சுமி நடராசா (தாய்) — அம்மன் கோயிலடி, கோப்பாய்மத்தி.

★ திருமதி செல்லப்பா அற்புதமலர் (தாய்) — நுணாவில் மேற்கு,

★ துரைசாமி சுப்பிரமணியன் (தகப்பன்) — 'சாந்தம்' 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

★ ஆசிர்வாதம் பெர்னான்டோ (தகப்பன்)— 43/2, புதுவீதி, கொய்யாத் தோட்டம்.

★ திருமதி கே. அல்லி லெட்சுமி (தாய்) — மீசாலை கிழக்கு.

★ சபாபதி சிதம்பரப்பிள்ளை (தகப்பன்) — கைதடி, நாவற்குழி தெற்கு,

★ திருமதி கதிரம் செல்லச்சாமி (தாய்) — மந்துவில் மேற்கு, கொடிகாமம்.

★ திருமதி ரி. செல்லம்மா (தாய்) — மீசாலை கிழக்கு.

★ திருமதி கரோலினா குமார் (மனைவி) — 31, பார்க் வீதி, றெக்கிளமேசன், குருநகர்.

★ ஏ. மகேந்திரன் (தகப்பன்) — 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை

★ திருமதி ஜெயா பாலகிருஷ்ணன் (மனைவி) — ஏ ஜி.ஏ. அலுவலக ஒழுங்கை சுன்னாகம்.

★ திருமதி புஸ்பராஜா சிவமாலாதேவி — முருகமூர்த்தி கோயில் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(ஐ-3-5)

# வருடப் பிறப்புக் கருமம்

கால ஓட்டத்தின் அறுபது வருடச் சுற்று வட்டத்தில் பதினொராவது ஆண்டான ஈசுவர வருடம் நாளை ஞாயிற்றுக்கிழமை (13-4-97) இரவு பிறக்கிறது. விஷு புண்ணிய காலமும் அன்றே வருகிறது.

குடாநாட்டில் புழக்கத்தில் உள்ள வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் புத்தாண்டுப் பிறப்பு அதனுடன் சம்பந்தப்பட்ட அலுவல்களை வகுத்துள்ளன. இரண்டு பஞ்சாங்கங்களிலும் உள்ள விவரங்களை அவற்றைப் பின்பற்றும் வாசகர்களின் தகவலுக்காக இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

**வாக்கியம்:**

வருடப்பிறப்பு: ஞாயிற்றுக்கிழமை முன்னிரவு 8 மணி 37 நிமிடத்தில்.

புண்ணிய காலம்: ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4.37 மணி முதல் இரவு 2.37 மணி வரை.

ஆடை: சிவந்த பட்டாடை அல்லது சிவப்புக்கரை அமைந்த புதிய ஆடை.

**கைவிஷேசம்:**

(1) சித்திரை முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 6.09 மணிமுதல் 7.29 மணிவரை
(2) சித்திரை முதலாம் திகதி திங்கட்கிழமை மு.ப.9.15 மணிமுதல் 9.52 மணிவரை
(3) சித்திரை முதலாம் திகதி நண்பகல் 12.14 மணி முதல் 1.20 மணிவரை
(4) சித்திரை நான்காம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.03 மணிமுதல் 1.30 மணிவரை.
(5) சித்திரை நான்காம் திகதி வியாழக்கிழமை மாலை 6.29 மணி முதல் இரவு 8.01 வரை.

**திருக்கணிதம்:**

வருடப்பிறப்பு: ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணி 51 நிமிடத்தில்

புண்ணிய காலம்: ஞாயிற்றுக்கிழமை மாலை 6.51மணி முதல் பின்னிரவு 2.51 மணிவரை

ஆடை: செந்நிற பட்டாடை அல்லது சிவப்புக் கரை வைத்த வெள்ளை நிறப் புதிய ஆடை

**கைவிஷேசம்:**

(1) சித்திரை முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 6.04 மணிமுதல் 7.16 மணிவரை
(2) சித்திரை முதலாம் திகதி திங்கட்கிழமை மு.ப. 9.04 மணி முதல் 9.40 மணிவரை
(3) சித்திரை நான்காம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.03 மணிமுதல் 1.15 மணி வரை

(★ யாவும் பழைய நேரப்படி)

## கருத்தரங்கு

வலிகாமம்தெற்கு, ஏப். 12

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு மருதனார் மடம் இராம நாதன் கல்லூரியில் எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

ஆண்டு ஐந்துக்கான புதிய பாடத்திட்டம் சம்பந்தமாகவும் கருத்தரங்கில் கலந்துரையாடப்படும் என பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. வீ. இராசையா அறிவித்துள்ளார் (ஐ-152)

## மண்எண்ணெய் விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சங்கக் கிளைகள் மூலம் தற்சமயம் தாராளமாக மண்ணெண்ணெய் விநியோகிக்கப் படுகிறது. அங்கத்தவர்கள் தேவையான அளவு மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. (ஐ-15)

## மாணவரிடையே போட்டிகள் யுனெஸ்கோ நடத்தும்

வலிகாமம் தெற்கு, ஏப். 12

மாணவர்கள் அன்பு வழியில் சாந்தம், பொறுமை, சகிப்புத்தன்மை பொருந்தியவர்களாக, பண்பாட்டுச் சின்னங்களாக வளர வேண்டும் என்ற நோக்கில் ஐக்கிய நாடுகள் கல்வி கலாசார விஞ்ஞான நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது. கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் போட்டிகள் நடைபெறும்.

பேச்சுப்போட்டிகளை ஏப்ரல் மே மாதங்களிலும் கட்டுரைப்போட்டிகளை ஜூன், ஜூலை மாதங்களிலும் சித்திரப் போட்டிகளை ஒகஸ்ட் செப்ரெம்பர் மாதங்களிலும்நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

ஆரம்பப் பிரிவு (ஆண்டு 1-5) கனிஷ்ட பிரிவு (ஆண்டு 6-8) கனிஷ்ட இடைநிலைப் பிரிவு (ஆண்டு 9-11) மேற்பிரிவு (ஆண்டு 12-13) ஆகிய நான்கு நிலைகளில் போட்டிகள் நடைபெறும்.

பாடசாலை மட்டத்தில் மே 9 ஆம்திகதிக்கு முன்பும், கோட்டமட்டத்தில் மே 30 ஆம் திகதிக்கு முன்பும் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களை பெறுபவர்கள் வலய மட்ட, மாவட்ட மட்ட போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். (ஐ-152)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் புதியபிரிவு

அச்சுவேலி, ஏப். 12

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் 10 லட்சம் ரூபா செலவில் புதிய வார்ட் அமைக்கப்படவுள்ளது.

நோயாளரின் வசதியை கருத்திற் கொண்டு 24 கட்டில்களைக் கொண்ட இப் புதிய வார்ட் 10 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது.

(ஐ-11)

## புறக்கோட்டை தீ விபத்தில் 15 கடைகள் நாசம்

கொழும்பு, ஏப்.12

புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விக்றோரியா கட்டடத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் அக்கட்டடத்தில் இருந்த கடைத் தொகுதிகள் எரிந்து சாம்பாரயின.

15 கடைகள் தீயினால் முற்றாக நாசமாகின. இத் தீ விபத்துக்கான காரணங்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஐ)

## தொழில் நுட்ப உத்தியோகத்தர் எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 12

அரசாங்க, மாகாண அரசாங்க சேவை தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது, 2 ஆவது, 3 ஆவது (சிவில் எந்திரவியல்) எழுத்துப் பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதியும் அதன் பின்னரும் நடத்தப்படவுள்ளன. இதற்கான விவரங்கள் வலயம் 1 யாழ். கல்வித் திணைக்களத்தில் உள்ளன. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத்தகுதி உடையவர்களை யாழ். வலயம் 1 கல்விப்பணிமனையில் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## திங்களன்று மக்கள் வங்கி இயங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 12

தமிழ் — சிங்கள புது வருடத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்கள் சுப வேளையில் தமது கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்ள வசதியாக மக்கள் வங்கியின் சகல கிளைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை புத்தாண்டு தினத்தன்று காலை 8-30 முதல் நண்பகல் ஒரு மணிவரை திறந்திருக்கும் என உதவிப்பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

அன்றையதினம் புதியகணக்குகளை ஆரம்பிக்கவும், பணம் வைப்பிலிடவும் வசதி செய்யப்பட்டுள்ளது. (ஐ 3)

## இ.தொ. காவின் மேதின ஏற்பாடு

கொழும்பு, ஏப் 12

உள்ளூராட்சித் தேர்தலில் படுதோல்வியடைந்த இ.தொ.கா. மேதினத்தைத் தலவாக்கொல்லையில் எழுச்சி விழாவாகக் கொண்டாட முடிவு செய்துள்ளது.

இ. தொ. கா. தலைவர் தொண்டமானுக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கை நிரூபிக்கும் வகையில் பிரமாண்டமான முறையில் மேதினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-3-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு மிரி மட்டுவில் வைக்கோல் நுணாவிலில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மொழி பெயர்ப்பாளர், இலங்கை வங்கியடி, சாவகச்சேரி.

(சி/481)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறொயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1kg 150/-, இல. 86, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 474)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. 1 Kg 150/-, வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். இல. 101 இலுப்பையடிச்சந்தி அருகாமை, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (46313)

புறொயிலர் (Broiler) இறைச்சிக் கோழி, விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். A. M. T. ஸ்ரோர்ஸ் (சிறிகடை) தபாற் கட்டைச்சந்தி, அரியாலை.

[46255]

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely.

(9510)

### சோதிடப்பலன்

சோதிட ஞானி சண்-மாஸ்ரர் எழுதிய 97-98 புத்தாண்டு (12 ராசிகள்) பலாபலன் நூல், இப்போது எங்கும் கிடைக்கின்றது. கேட்டு வாங்குங்கள். ஜோஸ்யர் புத்தகசாலை, யாழ்நகர்.

[46224]

### இசை வகுப்புகள்

புதிய இசை வகுப்புகள் ஓர்கன், கிற்றார், புல்லாங்குழல், வீணை, வயலின் மெலோடிக்கா ஆரம்பம்: 14-4-97. நேரம்:- 12-00 — 1-00 P. M தொடர்பு:- செல்வி வாசு கிரங்கன் நியூ வீணா கானம், 16/2 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (46294)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்), விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை.

[43756]

### மணப்பெண் தேவை

அரச உயர் பதவியிருந்து ஓய்வு பெற்ற பிரபல நூலாசிரியருக்கு, கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் சொந்த வீடு வசதியுள்ள, 40 வயதுக்குட்பட்ட, நல்லொழுக்கமும், கல்வியறிவுமுள்ள, இந்து சமய மணமகள் தேவை. முதற்கடிதத்திலேயே சகல விவரங்களும் தெரிவிக்க வேண்டும். உடன் தொடர்பு:- மே/பா இல.606.

(46316)

### கணிதம் 97

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், தவணை அலகுகளில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 31 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (46188)

### பாலர் பாடசாலை

பாலர் பாடசாலை (Trinity Tiny Tots) ( Montessori School) ஆரம்பம், 28 – 04-97 விண்ணப்பிக்கவும் தொடர்பு: No:- 14, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

(9504)

### திருமணசேவை

''சேவை நம்பகம்'' விவாக சேவையில் பொறியியலாளர்கள் உட்பட பல தரங்களிலும் மணமக்கள் உள்ளனர். பொருத்தமான தேர்வுகளுக்கு குறிப்புகள், தகவல்கள் படங்களுடன் பெற்றோர் நேரில் வரலாம். 51, வைமன் வீதி, நல்லூர்.

(46320)

### மணமகன் தேவை

கிறிஸ்தவ கௌரவ வசதியுள்ள பெற்றோரது ஏகபுதல்விக்கு, 30 வயதுக்குட்பட்ட தகுந்த உத்தியோகமுள்ள மணமகன் உள்நாட்டில்/வெளிநாட்டில் தேவை. ''சேவை நம்பகம்'' விவாக சேவை வைமன்வீதி நல்லூர்.

(46319)

## தீவக பாக்கியம் வைத்தியசாலை

மீண்டும் வேலணை துறையூர் சர்வோதய கட்டடத்தில் இயங்குகிறது.

கிரந்தி எண்ணெய் வகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

**நிர்வாகம்.**

(46318)

உ

மீசாலை

## திருநீல கண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்

# திருப்பணி நிதிசேகரிப்பு

விநாயக அடியார்களே!

புனருத்தாரணப் பணிகள் செய்வதற்காக மேற்படி ஆலயம் **09-02-97**இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. **08-06-97**இல் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் ஆலய திருப்பணிச்சபையின் சாவகச்சேரி மக்கள் வங்கியிலுள்ள இல. **2670** கணக்கில் வைப்பிலிடுமாறும் அல்லது கோயில் முகாமையாளரிடம் வழங்குமாறும் வேண்டுகின்றோம்.

ஐ. மாணிக்கவாசகர்
தலைவர்.

அ. கயிலாயபிள்ளை
செயலாளர்.

(46264) **திருப்பணிச் சபை.**

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வேலுப்பிள்ளை அப்புக்குட்டி

மண்ணில்: **25 - 06 – 1928**

விண்ணில்: **07 – 04 – 1988**

**திதி: 12-04-1997**

ஒரு தவப்புதல்வியையும், ஐந்து மைந்தர்களையும் பெற்று சீருஞ் சிறப்புமாக வாழவைத்த எம் அன்புத் தந்தையே! ஒன்பதாண்டு சென்றதையா ஓயவில்லை நம் கவலை. தலைவனை இழந்து மனைவியிங்கு கலங்குகிறார்; தந்தையைப் பிரிந்து பிள்ளைகள் நாம் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா அமைதியுற தினந்தினம் இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி கனகம்மா,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

ஐ. எஸ். வி. வேல்.
சுழிபுரம். (46237)

## லிபேட்டி மோட்டார் ஹவுஸ்

**நெல்லியடி**

எமது ஸ்தாபனத்தின் கிளையான

## கிருஷ்ணா மோட்டர்ஸ்

என்னும் உதிரிப்பாக விற்பனை நிலையத்தை

**பருத்தித்துறை பிரதான வீதியில்**

அமைந்துள்ள கட்டடத்தில் எதிர்வரும்

**புத்தாண்டு தினமான 14-04-97 திங்கள்**

அன்று காலை **9. 30** மணியளவில் ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ ★ ★

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**லிபேட்டி மோட்டார் ஹவுஸ்**
**நெல்லியடி.**

(சி/478)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



## () செல்வன் ர. பிரதீபன் ()

கரம்பொன் மேற்கைச் சேர்ந்த வே. ரகுபதிசர்மா பிரதீபன் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று கரம்பொன் முருகமூர்த்தி கோயிலில் - தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, தர்சன் அண்ணா, தீபா அக்கா, சாந்த் அண்ணா, வீணா அக்கா ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

முருகன் கோயில்,
கரம் பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (9508)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 – 01 – 1944



மறைவு: 25 – 03 – 1996

## திருமதி சரஸ்வதி இராஜேந்திரா

**B.A (Cey.) Dip - in Edu.**

ஈராறு மாதம் கண்ணீரில் கரைந்ததே
ஆறாது எம் சோகம் நிரப்பாது உங்கள் இடம்
பிள்ளைகள் நாம் கதறுகின்றோம் - நீங்கள் வரவில்லை
உங்கள் சிரித்த முகம் காணாமல் வாடுகின்றோம்
நீங்கள் இன்றி நாம் கலங்கித் தவிக்கின்றோம்.
நடுக்கடலில் தத்தளிக்கும் துரும்பானோம் நாம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்:

**கணவன், பிள்ளைகள், பெறாமக்கள்,**
**தாய், சகோதரி, சகோதரர்கள், மைத்துனர்.**

பங்களா ஒழுங்கை,
மல்லாகம்.
(39/8A, Edmonton Road,
Kirullapone, Colombo-6) (46315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வருமுன் காக்க!

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு, பின்னர் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை பலாலிப் பிரதேசத்தில் உள்ள அலுவலகம் ஒன்றில் நடைபெறவிருக்கின்றன.

இதற்கு முன்னரும் கடந்த ஜனவரி மாதத்தில் மூன்று தினங்கள் இத்தகைய விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. காணாமற் போயிருந்த 57 பேர் குறித்து அப்போது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

அந்த விசாரணைகளை நடத்தியிருந்த—பாதுகாப்பு அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழு— தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்ததாகப் பின்னர் செய்திகள் வெளியாகின,

ஆனால் அந்த இடைக்கால அறிக்கையில் இருப்பவை 'மூடுமந்திரம்' ஆக வைக்கப்பட்டுள்ளன. அந்த நிலையில் மீண்டும் அடுத்த கட்ட விசாரணைக்காக விசாரணைக்குழு வடக்கே வருகின்றது.

ஏற்கனவே தான் நடத்திய விசாரணைகளின் பெறுபேறுகளை விசாரணைக்குழு வெளியிட்டால்—

அல்லது அதனை நியமித்த அரசு வெளியிட்டால்—

அதனடிப்படையில் அந்த விசாரணைக் குழுவின் பக்கச் சார்பற்ற — நியாயமான — போலியற்ற — தன்மை குறித்து மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை பிறக்க வாய்ப்புண்டு. மக்களும் அச்சமின்றி உண்மைகளை எடுத்தியம்பி — சாட்சியம் கூற — முன்வருவார்கள்.

யாழ். குடாநாட்டில் அறுநூறுக்கும் அதிகமானோர் காணாமற் போயிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக மனித கௌரவத்துக்கான மன்றம் தெரிவித்திருக்கின்றது.

காணாமற்போனோர் எண்ணிக்கை கூடவோ குறையவோ — எப்படியாயினும்— அது குறித்து விரிவாக விசாரணை நடத்தப்பட வேண்டும்; தவறுகளுக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதுவே நீதி.

இந்த விசாரணைகள் மூலம் காணாமற்போனோர் கண்டு பிடிக்கப்பட வாய்ப்புக் கிட்டுமாயின் அதுவும் வரவேற்கத்தக்கதே.

எனினும் இந்த விசாரணை என்பது 'முடிந்து விட்ட' ஒன்று குறித்து நடத்தப்படுவது என்பது ஓரளவு தெரியாததல்ல.

இந்த விசாரணை ஒருபுறம் நடக்க, இத்தகைய 'முடிந்து விட்ட' அல்லது 'முடித்து விடுகின்ற' செயல்கள் இனிமேல் தொடராமல் பார்ப்பது அனைத்திலும் முக்கியமானது.

யாழ். நகரில் சில இடங்களில் பொது மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல் மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்களை குறிப்பிட்டு, கண்டித்து 'புளொட்' அமைப்பு சில தினங்களுக்கு முன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் அராலெட்டிப் பகுதியில் மூளை சிதறி உயிரிழந்த மாணவன் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்டமை, ஆனைக்கோட்டைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு பாடசாலை மாணவன் உயிரிழந்தமை போன்றவை பொது மக்களை அதிருப்தியுற வைத்திருக்கின்றன.

நடந்த பின்னர் விசாரணை நடத்துவதை விட, வருமுன் காப்பதே மேல்!

# வடக்கு-கிழக்கு மாகாணசபை மீது யாழ். மக்கள் நம்பிக்கை இழப்பு

## அரச அதிபர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஏப். 12

''வடக்கு — கிழக்கு மாகாணசபை மீது யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கை இழப்பதுடன் அதன் செயற்பாட்டில் சந்தேகமும் கொண்டுள்ளனர்''

—இப்படி கூறினார் யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன்.

கடந்த 7ஆம் திகதி வடக்கு—கிழக்கு மாகாண சபை அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு—கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே மாகாண சபையால் யாழ். மாவட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

நிலைமை சரியில்லை என்று கடந்த காலத்தில் காரணம் கூறி வந்த மாகாணசபை இப்போதும் கூட உதவத் தயாரில்லை.

மக்கள் தொகை அடிப்படை, பிரதேசப் பரப்பளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு உதவிகள் வழங்கப்படுவதில்லை.

இதன் காரணமாக யாழ்ப்பாண மக்கள் மாகாணசபை நிர்வாகத்தில் நம்பிக்கையை இழந்துள்ளதுடன் அதன் செயற்பாட்டில் சந்தேகமும் கொண்டுள்ளனர்.

இதேநிலைதான் முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளுக்கும். அந்தப் பிரதேசத்துக்கும் மாகாணசபை உதவுவதில்லை. அங்கு செல்லமுடியாது என்று மாகாணசபை அதிகாரிகள் காரணம் கூறி வருகின்றார்கள்—என்றார்.

(உ-3)

## விமானம் மூலம் அழைத்து வர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு வீரவில புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 85 பேர் நாளை விமான மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படவிருக்கின்றனர்.

கடந்த புதன்கிழமை வீரவிலவில் வைத்து விடுதலையான இவர்கள் புத்தாண்டுக்கு முன்பாக தமது உறவினர்களுடன் இணைய வசதியாக விமானமூலம் அழைத்து வரப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

இவர்களை பலாலியில் வைத்து யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் பொறுப்பேற்று அவர்களை யாழ். நகருக்கு அழைத்து வந்து அவரவர் உறவினர்களிடம் ஒப்படைப்பார்.

(உ-3)

## நாளை

**பங்குனி 31**

ஞாயிற்றுக்கிழமை

திதி: ஷஷ்டி நண்பகல் 12.23 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை பின்இரவு 4.20 வரை.

ஈசுர வருடப் பிறப்புக்கு முதல் நாள்

சுபநேரம்: 9.06-10.36

ராகுகாலம்: 4.36-6.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஆங்கில மருந்து வணிகர் மன்றம் அறிவிப்பு:

# மருந்துப் பொருள்கள் தற்போது அதிக விலையில் விற்கப்படவில்லை

## யாழ். வணிகர் கழகத்தின் அறிக்கைக்குப் பதில்

யாழ்ப்பாணம், ஏப். 12

உணவுப் பொருள்கள், மருந்து வகைகள், குளிர்பானங்கள், பிஸ்கெட் வகைகள், தேநீர்க் கடை பலகார வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை நிதான விலையில் விற்குமாறு கோரி யாழ். வணிகர் கழகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக —

கவலை வெளியிட்டு, வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம் பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

கடந்த 8 ஆம் திகதி உதயனில் வெளியான யாழ். வணிகர் கழகத்தின் அறிக்கை தொடர்பாக மேலதிக விவரங்களை பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது எமது மன்றத்தின் கடமையாகும்.

அத்தியாவசியப் பொருள்களை நிதான விலையில் விற்குமாறு யாழ், வணிகர் கழகம் கேட்டுக் கொண்டதை பாராட்டுகின்றோம். கடந்தகாலத்தில்பலபொருள்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டு ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டது. உதாரணமாக 'செவின் — அப்', 'பெப்சி', 'மிராண்டா' மொத்த விலை ரூபா 60/- எனவும் சில்லறை விலை ரூபா 70/- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அப்பொருள்கள் நிர்ணயம் செய்ததை விடச்சந்தையில் குறைந்த விலைக்கே விற்கப்பட்டன. அதுபோல் உருளைக்கிழங்கும் குறைந்த விலைக்கு விற்கப்பட்டது.

ஆனால் இன்று 'பெப்சி', 'மிராண்டா', 'செவின்அப்' பேன்றவை 105/- ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன. இதற்குக் காரணம் யார்? எங்கிருந்து யாரால் இச்சோடா வழங்கப்பட்டது?—என்ற விவரங்கள் அனைத்தும் வணிகர் கழகத்துக்கு தெரியும். சில்லறை வியாபாரிகளுக்கு இலாபம் 10 வீதம் கூட கிடைக்கவில்லை, ஆனால் மொத்த வியாபாரியின் இலாபம் கிட்டத்தட்ட 95வீதம் ஆகும். ஆனால் இந்த அவப்பெயரும் தலைகுனிவும் சில்லறை வியாபாரியையே சேருகிறது.

ஆனால் தாம் எடுத்துக் கொண்ட விடயத்தைச் சுட்டிக்காட்டாமல் அவர்கள் உணவுடன் மருந்து வகைகளின் விலைகள் நாளாந்தம் ஆனை விலை, குதிரைவிலை என்று குறிப்பிட்டது தவறு.

எமது மன்றம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலிருந்து தருவிக்கப்பட்ட மருந்துகளை 'இங்கு மருந்தகங்களுக்கு இரண்டு தடவை விநியோகம் செய்ததால் மருந்தின் விலை பன்மடங்கு குறைந்து சில மருந்துப் பொருள்கள் கொழும்பு சில்லறை விலையிலும் பார்க்க இங்கு குறைவாக விற்கப்படுகின்றன.

அத்துடன் இன்னுமோர் மகிழ்ச்சியான செய்தி.

கொழும்பிலிருந்து கப்பலில் மருந்து கொண்டுவரும் மொத்த வியாபாரிகள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் விலையை அண்டிய விலைக்கே இங்கு அவற்றைக் கொடுக்கிறார்கள். அத்துடன் கூடுதலான மருந்துப் பொருள்கள் விற்க முடியாது தேங்கியும் உள்ளன.

இந்நிலையில் வெளியில் நடப்பது தெரியாமலும் மருந்துப் பொருள்களின் விலையை சோடாவுடன் ஒப்பிட்டு மக்களுக்குத் தவறான கருத்தை பரப்பியதை எவ்வழியிலும் நியாயப்படுத்த முடியாது.

நிர்வாகசபை உறுப்பினர்களாக இரு மருந்தக உரிமையாளர்கள் அங்கு இருந்தும் இதுபற்றி அவர்கள் ஆராய்ந்து தீர்மானம் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டதுதான் எமக்குக் கவலையளிக்கிறது.

கொழும்புப் பத்திரிகையாகிய வீரகேசரியில் வெளியாகிய செய்தியில் மருந்து வர்த்தக சங்கம், மருந்துப் பொருள்களை யாழ். குடாநாட்டில் விநியோகித்ததால் அதன் விலை நன்கு குறைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# மன்னார் நகரில் புலிகள் ஊடுருவல்!

''மன்னார் நகரில் இன்னமும் விடுதலைப் புலிகள் பொதுமக்களுடன் இணைந்து நடமாடுகிறார்கள்''—என்று மன்னார் ஆயுதப்படைகளின் தளபதி ஆரியரத்தின ரோய்ட்டருக்கு தெரிவித்துள்ளார் என 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு உணவுப் பொருள்கள் செல்லாமல் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மன்னாருக்கு பொருள்கள் எடுத்து வருவதில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் புலிகளுக்கு உணவு செல்வதை தடுக்க முடிகிறது என்றும் அவர் கூறினார்.

(உ-3-150)

# 30 தொன் மரக்கறி கப்பலில் தெற்கே!

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கே 30 மெற்றிக் தொன் மரக்கறி வகைகள் கப்பல் மூலம் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட ''மாஹோ'' கப்பலில் பரீட்சார்த்தமாக மரக்கறி வகைகளும் வாழைக்குலைகளும் அனுப்பப்பட்டுள்ளன.

கட்டணம் எதுவுமின்றி யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டில் இவை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

குடாநாட்டில் மரக்கறி வகைகள் [illegible] யானதால் விவசாயிகள் நஷ்டமடைவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

(ஐ-3)

# புதுவருடத்தை ஒட்டி விளையாட்டு நிகழ்வு

புதுவருடத்தை ஒட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள விளையாட்டு விழாவின் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட் மற்றும் தாச்சிச் சுற்றுப் போட்டிகளின் ஆட்டங்கள் நேற்றுமுதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, கிறீஸ் கம்பம் ஏறுதல், போர்த்தேங்காய் அடித்தல், கயிறு இழுத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் இந்த விளையாட்டு விழாவில் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

புத்தாண்டு தினத்தை ஒட்டி கோப்பாய் பிரதேச செயலர் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை புதுவருடத்தன்று பிற்பகல் 3.00 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதில் கரப்பந்தாட்ட இறுதி நிகழ்வும், போர்தேங்காய் அடித்தலும், பரிசில் வழங்கும் வைபவமும் இடம் பெறும். கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(உ)

★ ★ ★

அனலைதீவு முத்தமிழ் கலா மன்றத்தினரும் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழா நாளை மறுதினம் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் கலாமன்றத் தலைவர் சௌந்திரராஜன் தலைமையில் நடைபெறும்.

காலை 6–00 மணிக்கு மரதன் ஓட்டம், ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், நீச்சல் போட்டி ஆகியவையும் —

பிற்பகல் 2-00 மணிக்கு இப்பகுதியில் உள்ள பாலர் பாடசாலைச் சிறார்களின் விளையாட்டுப் போட்டிகளும் இளைஞர்களின் சறுக்குமரம் ஏறுதல், கயிறிழுத்தல் போட்டிகளும் —

மாலை 7.00 மணிக்கு நாடகம், கோலாட்டம், பரதநாட்டியம், சிறுவர் நிகழ்ச்சி உட்பட பல கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

இவ்விழாவின் முதன்மை விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த ரஜீப் கலந்துகொள்வார்.

(உ-117)

★ ★ ★

புது வருடத்தை யொட்டி வேலணையில் இன்று முதல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஷார்ஜா கிரிக்கெட்:

# 'சிங்கர்' கிண்ணம் இலங்கைஅணிக்கு

சார்ஜா, ஏப். 12

நேற்று ஷார்ஜாவில் நடந்த — பாகிஸ்தான், இலங்கை, ஸிம்பாப்வே கிரிக்கெட் அணிகள் கலந்து கொண்ட— ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணியை இலங்கை அணி 4 விக்கெட்டுக்களால் தோற்கடித்து 'சிங்கர்' வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய இலங்கை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப்பெற்றுவெற்றி பெற்றது. அரவிந்தடி சில்வா ஆட்டமிழக்காமல் 87 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தப் போட்டித் தொடரில் அரவிந்தடி சில்வா மொத்தமாக 409 ஓட்டங்களைப் (சராசரியாக 136 ஓட்டங்களைப்) பெற்று சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசையும் ஆட்டத்தொடரில் நாயகன்பரிசையும்பெற்றார்.

சிறந்த பந்து வீச்சாளருக்கான பரிசு முத்தையா முரளிதரனுக்கும், சிறந்த பந்து தடுப்பாளருக்கான பரிசு றோஷான் மகாநாமாவுக்கும் வழங்கப்பட்டன.

இந்தப் போட்டியில் பாகிஸ்தானுடனான மூன்று போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## புதுவருடத்தை...

(ஏழாம் பக்கத் தொடர்)

மூன்று நாள்களுக்கு விளையாட்டுப் போட்டியும் கலைவிழாவும் நடைபெற விருக்கிறது.

ஈ.பி.டி.பி., வேலணை பிரதேச செயலகம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பிரசைகள் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இவ்விழாவுக்கு ஈ.பி.டி.பியைச் சேர்ந்த யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உ. பாஸ்கரன் சிறப்பு விருந்தினராகவும், ஈ.பி.டி.பி. தீவக அரசியல் பொறுப்பாளர் என். மனோகரன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இவ்விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம், கரப் பந்தாட்டம்மற்றும் நீண்ட தூர மரதன் ஓட்டம், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் உட்படப் பல நிகழ்வுகள் இடம்பெறும். (உ-3)

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்)

எண்ணத்தைக் கூட ஏற்படுத்தியுள்ளது என அமெரிக்க மனித உரிமைகள் தூதுக்குழுப் பிரதிநிதி அங்கு தெரிவித்தார். (உ-4)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

சேவைகள் நடைபெறவிருக்கின்றன.

யாழ்.சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 560 க்கு உட்பட்டவர்களை அந்த நாள்களில் காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)


மலிவு விற்பனை

ஜீன்ஸ் -- ரூ 300/-

சகல அளவிலும் உண்டு.

சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரியகடை, யாழ்.

(சி/487)



யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

முறைசாராக் கல்விப் பிரிவு

தொழிற்றிறன் பயிற்சிகள் - 1997

1. சுருக்கெழுத்து தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்)
2. உடையமைத்தல்
3. கணக்கியல்

விண்ணப்ப முடிவு திகதி: 14 - 04 - 1997

- அதிபர்

(சி/492)



புலமைப் பரிசில் '97

06-04-97 இல் எம்மால் எமது நிறுவனத்தில் நடத்தப்பட்ட 18 ஆவது பரீட்சையில்

செல்வன் இலங்கநாதன் கோகுல்நாத்

(யா/ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி — புத்தூர்)

முதன்மைப் புள்ளி பெற்றமைக்காக பாராட்டுகின்றோம்.

13-04-97 ஞாயிறு வழமை போல் 19 ஆவது பரீட்சை நடைபெறும்.

பரீட்சைப் பகுதி Bond Institutes

(46334) யாழ்ப்பாணம்.


## அடையாள அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்.நகர் மேற்கு (யா/73) கிராம சேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் புதன் கிழமை காலை 9.00மணிக்கு கிராமசேவையாளர் பணிமனையில் வைத்து வழங்கப்படும். [உ]

## அப்பாவி...

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்ந்தும் மீறப்படுவதைத் தடுக்க ஜனாதிபதி உடனடியாகத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் இப்படிக் காணாமல் போவதற்குக் காரணம் படையினர் தான் என்பதற்கு தெளிவான அறிகுறிகள் காணப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது நடத்தும் தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் முகமாகத்தான் இராணுவம் இப்படி நடப்பது போல் தெரிகிறது. — இவ்வாறு அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகவும் கூடுதலான எண்ணிக்கையாக மக்கள் காணாமல் போகும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று மனித உரிமை இயக்கம் குறிப்பிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடந்த சம்பவம் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்குத் தெற்கே இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு பிடித்துச் செல்லப்பட்ட குறைந்தது 46 தமிழ் ஆள்கள் காணாமல் போயிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் காணாமற் போகுதல் பற்றிய விசாரணைகளை நடத்தும் ஐக்கிய நாடுகள் செயலணி போன்ற அனைத்துலக பார்வையாளர் குழுக்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவும் —

மக்கள் காணாமற் போகும் நிலையை நிறுத்துவதற்கு முற்றாக உதவி செய்யவும் —

ஜனாதிபதி அனுமதி வழங்க வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டிருக்கிறது.

மனித உரிமை மீறல்களின் அளவைக் குறைக்க அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் அத்தகைய மீறல்களுக்கு வழி செய்யும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றில் அரசாங்கம் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய அத்துமீறல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான படையினரை அரசாங்கம் கடுமையாகத் தண்டிக்கவேண்டும் என்றும் கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-4)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தீர்வுக்கான சமாதானபேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகளை அங்கீகரிப்பதாக இருக்க வேண்டும் — எனவும் அதில் கோரப்பட்டுள்ளது

இலங்கைப் படையினரால் மனித உரிமைகள் மீறப்படுதல் சர்வ சாதாரணம் என்றும் —

அரசியல் தீர்வு ஒன்றே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழி என்றும் —

தேவாலயங்களின் உலகக் கவுன்ஸில், சட்ட அறிஞர்களின் அனைத்துலக ஆணைக்குழு ஆகியன உட்பட மேற்படி [illegible] இயக்கங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. (உ-4-10)

# இரகசியப் பேச்சு புலிகளுடன் நடத்துக

### ஐ.தே.கவின் எம்.பி. கூறுகின்றார்

அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் பேச்சுக்கள் நடப்பதாயின், ஆரம்பத்தில் அப்பேச்சுக்கள் இரகசியமாக நடத்தப்பட வேண்டும் என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த போது அந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

விடுதலைப் புலிகளுடன் பேசுவது அவசியமான விடயமாகும். ஆரம்பத்தில் பேச்சுக்கள் இரகசியமாகவே நடத்தப்பட வேண்டும்.

இஸ்ரேல் — பாலஸ்தீன பேச்சுக்களும் ஆரம்பத்தில் இரகசியமாகவே நடந்தன. அதனை எமக்கு உதாரணமாக நாம் கொள்ள வேண்டும்.

பேச்சுக்கள் நடக்க வேண்டும்; அதே நேரம் அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான தெரிவுக் குழு தொடர்ந்து கூடவேண்டும்; யுத்தமும் தொடரப்பட வேண்டும் - என்றார் அவர். (உ-3-150)

# புதிதாக இரண்டு பல்கலைக்கழகங்கள்

கொழும்பு, ஏப். 12

இரண்டாயிரம் ஆண்டளவில் வடமேல் மாகாணம், ஊவா மாகாணம் ஆகியவற்றில் பூரணத்துவமான இரு பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

பிரதி உயர்கல்வி அமைச்சர் கலாநிதிவிவஸ்வர்ணபால மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்வி மறுசீரமைப்புக் குழுவின் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடந்தது அதைபடுத்து நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

பல்கலைக்கழக கல்வியை சீரமைப்பது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள 9 தொழில் நுட்பக் குழுக்களும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி கல்வியமைச்சரிடம் அறிக்கையைசமர்ப்பிக்கும் என்றும் அவர் கூறினார். (உ-3-150)

# எரிபொருள் வாங்கும் போது பற்றுச்சீட்டு பெற அறிவுறுத்து

குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் கொள்வனவு செய்யும்போது பற்றுச் சீட்டைப் பெறுமாறு யாழ். பெற்றோலியக் கூட்டுஸ்தாபன முகாமையாளர் பாவனையாளர்களைக் கேட்டுள்ளார்.

பாவனையாளர்கள் தாம் பெறும் பொருளின் விவரம், அளவு, விலை விவரம் ஆகியன அந்தப்பற்றுச்சீட்டில் உள்ளனவா என்பதைப் பரிசோதிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

பற்றுச்சீட்டு வழங்கப்படாத விடத்து அதைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுமாறும் —

ஏதும் முறைப்பாடு இருந்தால் அந்த நிலையத்தில் உள்ள முறைப்பாட்டுப் புத்தகத்தில் எழுதுமாறும் — அவர் மேலும் கேட்டுள்ளார்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 13 ரூபா 45 சதப் படியும், டீஸல் 21 ரூபா 55 சதப் படியும், பெற்றோல் 77 ரூபாப் படியும் எரிபொருள் நிலையங்களில் விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்)

சர்மாவிடம் கையளித்தார்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றதும் நாடாளுமன்றத்திலிருந்து அவர் நேரடியாக ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றார்.

தமது இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதாகவும் —

மாற்று ஏற்பாடுகள் செய்யும் வரை தம்மைப் பதவியில் இருக்கும்படி ஜனாதிபதி கோரியதாகவும் —

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்தும்படி தாம் ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்யவில்லை என்றும் —

தேவகௌடா இன்று அதிகாலை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (உ)

## தேவகௌடா ..

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்றது. அதன் பின்னர் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 158 பேரும் எதிராக 292 பேரும் வாக்களித்தனர். ஆறு பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டனர். 543 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் 456 உறுப்பினர்களே நேற்று வாக்களிப்பில் பங்கு பற்றினர்.

13 பிராந்தியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து பத்து மாதத்துக்கு முன்னர் ஐக்கிய முன்னணி அரசை அமைத்திருந்தன.

இந்த அரசுக்கு வெளியில் இருந்து வழங்கி வந்த ஆதரவை காங்கிரஸ் கட்சி திடீரென வாபஸ் பெற்றதை அடுத்தே ஐக்கிய முன்னணி அரசு கவிழும் நிலை ஏற்பட்டது. (உ)

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மத்தியில் காங்கிரஸ் கட்சியோ அல்லது பாரதீய ஜனதாக் கட்சியோ ஆட்சி அமைப்பதற்கு ஐக்கிய முன்னணி ஆதரவளிக்கமாட்டாது என ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

இது பற்றிய தமது கூட்டணியின் முடிவையும் தேவகௌடா எழுத்துமூலம் ஜனாதிபதியிடம் ஒப்படைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

180 க்கும் அதிக உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கியமுன்னணியிலிருந்து கணிசமானோர் பிரிந்து சென்று காங்கிரஸையோ அல்லது பாரதீய ஜனதாக்கட்சியையோ ஆதரித்தால் தான் அவற்றில் ஒன்று மத்தியில் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையைப் பெறமுடியும்.

ஆனால் ஐக்கிய முன்னணி தனது ஐக்கியத்தில்தீவிரமாக இருப்பதால் காங்கிரஸோ, பாரதீப ஜனதாக் கட்சியோ ஆட்சி அமைக்க முயன்றாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவது இயலாத காரியம் என்றே கூறப்படுகின்றது.

இந்த நிலையில் வேறுவழி இல்லாததால் புதிய பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org